August 1912. Registered No. M. 925.

செந்தமிழ்ச் செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்
ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

[தொகுதி 2.] பரிதாபி-ஸூ ஆவணி-மீ [பகுதி-5

உள்ளுறை. பக்கம்

நமக்கு அவசியம் வேண்டுவது	387
இதுவும் சைவசித்தாந்த சாதனமோ?	388
பெண்கல்வியாராய்ச்சி	392
விடுகதை கணிதவினு	394
விடுகதை விடைவேண்டும்	394
ஆன்ம இலக்கணம்	395
திருப்பெருந்துறைவிளக்கம்	397
சைவசித்தாந்தசாதனம்	400
அதிரசவிகடத்துணுக்கு	401
ஈதற்காரணமும் அதன்பயனும்	402
பக்தி	404
பலதேசவர்த்தமானம்	406

பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம், சுந்தரதாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. / தபாற்கூலி அணா. 4.
Copy Right Registered.
வெளிநாட்டுக்கு ரூ. 2. / தனி சஞ்சிகை அணா. 2.

லெக்ஷ்மி விலாச பிரஸ், திருச்சி.

செந்தமிழ்ச்செல்வம்

ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி-2.] பரிதாபி-௵ ஆவணி-மீ [பகுதி-5

நமக்கு அவசியம் வேண்டுவது

"அந்தபரம்பரை" என்றொரு வடமொழித் தொடர்மொழி காணப் படுகின்றது, நியாயங்களுள்ளும் இதுவொன்றென்பர். ஒரு குருடன் செல்ல அவனைப்பின் பற்றிச்சிலர் தொடர்ந்தனர். முன்சென்ற குருடன் ஒரு கிணற்றில் விழுந்தான், பின்சென்றவர்களும் அப்படியே ஒருவர் மேல் ஒருவர் விழுந்தனர். இதினின்று "அந்தபரம்பரை" என்னுந்தொடர்மொழி வழங்கலாயிற்றென்பர்,

இதனையே சாமானியரும் "குரும்பையாட்டுக்கூட்டம்" என்பர். குரும்பையாடுகள் ஒன்றன்பின் ஒன்று செல்வதே வழக்கம். செல்கின்ற ஆடுகளில் முதலாடுஒருபள்ளத்தில் விழுந்தால் மற்றஆடுகளும் ஒன்றன் பின் ஒன்ருக விழுந்து விடும். முதலாடு ஒன்று தாண்டிச் சென்ருல் மற்றஆடுகளும் காரணங்கருதாமலே தாண்டிச் செல்லும். இதுபற்றியே நம்முன்னோர் சென்றவழி என்று காரணங்கருதாது பின்பற்றுவோரைக் குரும்பையாட்டுக் கூட்டங்களெனப் பரிகசிப்பதையுங் கேட்டுளோம்.

இதனுனே; நாம், முன்னோர்சென்றவழி முன்னோர் சென்றவழி என்றுகாரணத்தைக் கருதாமல் பின்பற்றுதல் எளனத்திற்கிடமாகும் என்பதே.

நமது முன்னோர் சென்றவழியை நாம்பின்பற்றுதல் கூடாதென்பதன்று நம் கருத்து. நம் முன்னோர் நம்மினும் நுண்ணறிவும் ஞானமுமுடையவரென்பது யாவராலும்மறுக்க முடியாத உண்மை யெனக் கற்றோர் கூறுகின்றனர்.

ஆதலால், நமதுமுன்னோர் குருடன் கண்தெரியாமல் கிணற்றுள் வீழ்ந்ததுபோல் தகாதன வொன்றைச்செய்திரார் தக்கனவே செய்திருப்பர். அதைப் பின்பற்றுவதனல் நமக்கு யாதொரு தீங்கும் எய்தாது.

குரும்பை ஆட்டுக்கூட்டம் செல்லும் பொழுது முதல் ஆடு ஒரு கோலைக்கண்டு தாண்டினால்பின்னேதொடரும் ஆடுகள்காரணமின்றிக் (கோலில்லாத போழ்தும்) தாண்டும் அது போல் நம் முன்னோர் ஒரு காரணம் பற்றி ஒன்றை அநுட்டித்தால் நாம்அக்காரணத்தை அறியாமல் அவர் அநுட்டித்ததைமட்டும் கொண்டு நடத்தல் விசேஷமுடையதன்று ஒவ்வொரு அநுட்டானத்தையும் கண்டு அதன் காரணத்தையும் தெரிந்து இயற்றின் பயனுடையதாகும்.

பத்திராதிபர்.

இதுவும் சைவசித்தாந்த சாதனமோ!

(354-ம் பக்கத்தொடர்ச்சி)

முந்தின பக்கத்தின் றொடர்ச்சியை யெழுதப்புகும் முன் நமது நண்பர் முதலியாரவர்கள் நாம் எழுதப்புகுந்த விச்சிற்றுரையில் வெற்றுரை யெனும் பிரயோகத்தைக்கண்டு மிக்க சிற்றத்தோடு இதற்கோர்விடை பகர்ந்தார்கள். அவ்விடையில் நமதுரையை வெற்றுரையென்று திருப்பிச்சொன்னார்களே யொழிய நாஞ்சொற்ற விடயத்துக்குச் சமாதானங் கொஞ்சமும் கூறினார்களிலர். நமதுரையை வெற்றுரையென்றாலுஞ்சரி அல்லது பித்துரை யென்றாலுஞ்சரி. நமக்குஓர் அணுவளவேனும் அதினால்வருத்தமில்லை. ஔவைப்பிராட்டியார்"திருநான்மறை முடிவும் × × × திருமூலர் சொல்லும் ஒருவாசகமென்றுணர்" எனநமக்கு உபதேசித்திருப்பதாக நாஞ்சொன்னோம். இதற்கு முதலியாரவர்கள் ஒருவித சமாதானமுஞ் சொல்லாமலே அப்படி ஒருவாசகமாயிருந்தால் நான்காட்டிய நியாயங்களின் படிக்குள்ளவேற்றுமை தற்கால ஆரியவேதத்தில் புலப்படுவானேன்!! எனமீண்டும் ஆரியவேதமும் திருமந்திரமும் வேற்றுமை யுடையதெனப்பொருள்படும் படிக்கே கூறினார்கள். திருமந்திரத்தில் வேதச்சிறப்பு அந்தணரொழுக்கம் முதலியவநேக ஆரியவேதக்கொள்கைகள் கூறப்பட்டேயிருக்கின்றன. ஆனால் திருமந்திரம் வேதாந்த சித்தாந்தக்கருத்துக் கொண்டது. வேதம் பலபொருள் படக்கிடக்கும். ஆனதாற்றான் "ஆதிமறையோதி அதன்பயனொன்றுமறியா வேதியர்" எனஉமாபதி சிவம் திருவாய்மலர்ந்தருளியது. "அசிக்க ஆரியங்களோதும் ஆதர்" என்றும் "பேதவாதப்பிசுக்கர்" என்றும்திராவிடச்சுருதியிலுமருளப்பட்டிருக்கிறது. வேதத்தின் பொருள் சனகர் கண்ணுவர் முதலிய

மஹாரிஷிகளே அறியாது மயங்கச்சிவபெருமானே பொருளுணர்த்தி ணரென்றால் நம்போலியர்களுக்கா அது வெளிப்படும். "வேதமும் பொருள்களுமருளி" என நம் ஆளுடையப்பிள்ளையாரருளியதைக் கூர்ந்து ஆராயவேண்டும். இதைவிரிக்கிற்பெருகும் நாம்நாட்டியமேற் கோளாகிய ஔவைப்பிராட்டியார் திருவாக்குக்கு நம் நண்பரவர்கள் இனியாவதுசமாதானஞ்சொல்ல வேண்டியவர்களாக விருக்கிறார்கள்.

ஸ்ரீஞானசம்பந்தமூர்த்திகளருளிய "வேதநான்கினும் மெய்ப் பொருளாவது. நாதனும நமச்சிவாயவே!! என்ற திராவிடச்சுருதி யை நம் நண்பர் மேற்கோளாகவெடுத்துக் கொண்டு "நமச்சிவாயக் கருத்தும் நமச்சிவாய உபதேசக்கிரமமும் நமச்சிவாய அனுஷ்டான மும் ஏன் ஆரியருக்குள் இல்லை.? எனவும், ஏன் தற்கால இருக்காதி வேதத்தில் அந்த அநுஷ்டான சிவபூஜை காரியமுறைமை கூறப்பட வில்லை "எனவும் இரண்டு வினாக்கள் எழுப்பினார்கள். இவ்விரண்டு வினாக்களில் முதல் வினாவில் மூன்றுவிஷயங்கள் ஆரியருக்குள் இல்லை என்றார்கள். அவையாவன. முதலாவது நமச்சிவாயக்கருத்து. இரண் டாவது நமச்சிவாய உபதேசச் கிரமம். மூன்றாவது நமச்சிவாய அனு ஷ்டானம். இம்மூன்றுவிஷயங்களில் நமச்சிவாயக்கருத்துஆரியருக்கு ளில்லை யென்றால் பொருள் தெளிவாய் விளங்கவில்லை. பஞ்சாக்ஷர மஹாமந்திரத்தின் பொருளை ஆரியர் தெரிந்துகொள்ளவில்லை யென் பது பொருளா? அல்லது எப்படியோ அறியக்கூடவில்லை. நாம்விளக் கின படிக்காயின் இவ்விடயத்துக்கு மறுமொழி வைதீக உத்தமர்க ளாகிய விப்பிரர்களே கூறவேண்டியவர்களாக விருக்கிறார்கள். நமச்சி வாய உபதேசக்கிரமம், நமச்சிவாய அனுஷ்டானம், ஆரியருக்குள் பெண்பாலாருள்பட, அநாதியாகவே முக்காலத்திலுமிருப்பதாகவே நாம் திட்டமாய்ச்சொல்வோம். வைதிகசிகாமணிகளாகிய ஆரியமணி களாயுள்ளார் ஒவ்வொருவரும் வேதவிதிப்படி பஞ்சாக்ஷர உபதே சம்பெற்று ஜெபித்தே வந்து கொண்டிருக்கிறார்கள். "செந்தழலோம் பிய செம்மை வேதியர்க்கு அந்தியுண் மந்திரமஞ் செழுத்துமே." என்று திருஞானசம்பந்த மூர்த்திகளருளிய திராவிடசுருதியே இதற் குப் பிரபல பிரமாணமாம். திருத்தொண்டர் புராணச்சரித்திரத்தில் திருமறையோர் புராணம் நெ-ல் திருநீலநக்கநாயனார் தொண்டைச் சொல்லுங்கால், "தொலைவில் செய்தவத்தொண்டனார் சுருதியே முத லாங்கலையினுண்மையா மெழுத்தஞ்சுங் கணிக்கின்றகாலை." எனவும் சோமாசிமாறநாயனார் திருத்தொண்டைத் தெரிவிக்குங்கால் "சித்தந்

தெளியச் சிவனஞ்செழுத்தோது வாய்மை, நித்தநியமமெனப்பெற்று நெறியினின்றார்" எனவும், சிறப்புலி நாயனார் புராணத்தில் "அஞ்செழுத்தோதியங்கிவேட்கு நல்வேள்வியெல்லாம் நஞ்சணிகண்டர்பாத நண்ணிடச்செய்து " எனவும், இன்னும்பற்பல சமயங்களிலுமருளப் பட்டிருக்கின்றவைகளே பிராமணகுலோத்தமர்கள் பஞ்சாட்சரஜெபத்தை உருதியாகக் கொண்டவர்களென்பதற்குச்சான்றாம். இரண்டாவதுவினவில் தற்காலஇருக்காதிவேதத்தில் பஞ்சாட்சர அநுஷ்டான சிவபூஜாகாரிய முறைமை ஏன் கூறப்படவில்லை யென்கிறார்கள்.

"மும்மறையுள் நடுமறையின் முனிவிலெழுகாண்டத்தில்
செம்மைதரும் நடுக்காண்டம் சேர்ந்த எழுசங்கிதையின்
அம்ம நடுச்சங்கிதையின் ஆதியெழுத்து நடுப்
பொம்மலுற அமர்மனுவின் பொருளாவான் எவன் × × ×"

என்றபடி யஜுர்வேதத்தின் மத்தியில் ஸ்ரீம்காருத்திரத்தில்உத்தமோத்தமமான ஸ்ரீபஞ்சாட்சரம் விளங்குகிறது. அதுவருமாறு:—

"நமஃ ஸம்஭வெவ ச மயொ஭வெவ ச
நமஃ ஸங்கராயச மயஸ்கராயச
நமஃ ஸிவாயச ஸிவதராயச" என்ற மந்திரமே

வேதநான்கினுள்ளும் மெய்ப்பொருளாய் விளங்குவது ஸ்ரீபஞ்சாக்ஷரமென விக்கருத்தை அமைத்து நம் ஆளுடையபிள்ளையார் "வேதநான்கினு மெய்ப்பொருளாவது, நாதனாம நமச்சிவாயவே." என்று திராவிடச்சுருதியில் அருளினார்கள், இக்கருத்தையே "அருமறையினகத்தானை" யென நம் ஆளுடைய அரசுகளும் அருளியது. அறுபத்துமூவர்களில் ஸ்ரீருத்திரபசுபதி நாயனாராகிய பிராமணகுலச்சிரேஷ்டரும் "ஆய அந்தணரருமறையுருத்திரங்கொண்டு மாயனாதியா மலர்ச்சேவடிவழுத்தும், தூயவன்பொடு தொடர் பினிவிடையருச்சுருதி நேயநெஞ்சின ராகியத்தொழில்தலை நின்றார்" என நம் சேக்கிழார் திருவாய் மலர்ந்தபடி ஸ்ரீபஞ்சாட்சர மகாமந்திரமடங்கிய யஜுர்வேத மத்திய பாகமாகிய ஸ்ரீமகாருத்திரத்தை ஓதியேமுத்திபெற்றார்கள். இன்னும் விரிக்கிற் பெருகுமாதலினித்தோடு நிறுத்தினோம். சிவபூஜா விஷயத்திலோ வேதபுருஷனே வேதாரண்யத்தில் சிவார்ச்சனை செய்ததாக "சதுர மறைதான் றுதிசெய்து வணங்கும் மதுரபொழில் சூழ் மறைக்காட்டுறைமைந்தா" வெனநந்திராவிடவேதங்கோஷிக்குமாயின் இதுவிஷயம் ஏன்சந்தேகம். ஆனால் "தொ

குத்தவனருமறையங்கம் ஆகமம், வகுத்தவன் வள்ர் பொழிற்கூகமே விஞன்" என திராவிட சுருதி கூறுவதற்கிணங்க வேதமும் சிவாகமமும் அபேதமென ஆன்ரோர் கூறுவதாலும் வேதக்கருத்தைச் சிவாகமத்தில் விரித்து வேதத்துக்குப் பொருளாக அருளியிருப்பதாலும் சிவாகமத்தில் காணப்படும் சிவபூஜாவிதி முதலிய வேதத்தில் விரிவாய்க்காணக்கூடாது. மேற்கூறியவைகள் ஒவ்வொன்றுக்கும் நம் நண்பரவர்கள் பிரமாண மூலமாகச் சமாதானஞ்சொல்லவேண்டும். மேலும் நம் நண்பரவர்கள் விடையின் முற்பகுதியில் "நான் திருமந்திரத்தை நான்மறை யென்று கூறவேயில்லை" யென்றெழுதியிருக்கிறார்கள். சென்ற சித்திரைமீ த்திய செந்தமிழ் ச்செல்வம் 304-ம் பக்கத்தில் "நந்திருமூலநாயனர் 'நான்மறையோகிகளிலொருவர்' என்று பெரியபுராணம் சுட்டிக்கூறுவதால் இந்த "நான்மறை' தான் அந்நாயனர் வெளியிட்ட "அநாதிகலை ஆகமவேதம்" என்னும் "மறைப்பொருள்," என்றுமெழுதியிருக்கிறார்கள். இவ்வாக்கியத்தில் பிரயோகித்திருக்கிற அநாதிகலை, ஆகமவேதம், மறைப்பொருள் எனும் தொடர்மொழிகள் திருமந்திரமெனும் பெயருக்குப் பரியாயநாமங்களாகத் தாமெழுதிய தென்பதை முதலியாரவர்கள் ஒப்பாமல் திராது. ஆகையால் இந்த நான்மறைதான் அந்நாயனர் வெளியிட்ட திருமந்திரமென அவர்களெழுதிய வாக்கியம் தெள்ளியதாய் விளங்குகிறது. இவ்வாக்கியத்தில்இந்த நான்மறைதான் என்று கூறுவதால் எந்த நான்மறையென விஞவுங்கால் பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் "நான்மறையோகிகளொருவர்" என்றசெய்யுளில் பிரயோகித்திருக்கிற நான்மறையென மிகு தெளிவாய் விளங்கக் கூறிஞர்கள். ஆகவே. நான்மறைதான் அந்நாயஞர் கூறிய திருமந்திரமெனப் பொருள்தானே விளங்கக்கிடக்கிறதுநம் நண்பர்களெழுதியது இவ்வாறு பொருள் படக்கிடக்க "நான் திருமந்திரத்தை நான்மறையென்று கூறவேயில்லை" யென விப்பொது விடையில்பகர்கிறார்கள் அவர்களெழுதியதும் மேலேஉதகரித்திருக்கிறதுமான வாக்கியப்பொருளைத் தயைசெய்து அவர்களே விளக்கிக்காட்டவேண்டும். இனி நஞ் சேக்கிழார் பெருமான் திருமூல நாயஞர் புராணத்தில் திருமூலரை நான்மறை யோகிகளொருவர் என்று அருளியதில் பிரயோகித்திருக்கிற 'நான்மறை' எதுவென்பதை ஆராய்ப்புகுவாம்.

(இன்னும் வரும்) திரு-சாம்பசிவம்பிள்ளை.

பெண்கல்வி யாராய்ச்சி.

கிடைத்தற்கரிய மானிடப்பிறப்பெய்திய ஒவ்வொருவரும் தந் தம்யாக்கையை வளர்க்கத்தக்க செல்வப்பொருளைச்சம்பாதிக்கமுயல் வதுபோல பாபபுண்யங்களைப் பகுத்தறிந்து நல்வழியொழுகி (அறம் பொருள், இன்பம், வீடு) என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைந்து கடைத்தேறுதற்கு வழிவகை தெரியப்போந்த நல்லறிவை விளக்கத்தகுந்த கல்விப்பொருளையுங் கைக்கொள்ளவேண்டுவது அவ சியத்திலும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனென்றால் அக்கல் வியானது அறிவைவளர்க்கும். அறிவுவளர்ந்தால் உலகவியவகாரங் களையுறிய மனஞ்செல்லும், அப்படி மனஞ்செல்லும்போது நான்முக மாய் விஷயங்களை யாராய்ச்சி செய்யப்புகும், முன்னூல்களாகிய நன் னூல்களையாராய்ச்சி புரிந்தால் வேதாகமபுராணேதிகாசமுதலிய சா ஸ்திரசப்பிரதாயங்கள் நன்குவிளங்கும். அதனால் நன்மை தீமை யின் னின்னதெனத் தெற்றெனத்தெரியும், அவைதெரிந்தாற் பாபபுண்ய ங்களுக்குப் பயந்து நல்வழியில் நடக்கச்செய்யும். நல்வழியில் நடந் தால் இறுதியில் முத்தி யென்னும் பேரின்பவாழ்வு கிடைக்கும், ஆத லால் அதர்வண வேதஸம்ஹிதை 11-வதுகாண்டம் 24-வதுபிரபாட கம் 3-வது அநுவாகம் 18-வது மந்திரம். (ப்ரம்ஹசர்யேணகந்யாகுந் யுவாநாம் விந்ததேபதிம்) என்றஸ்லோகப்படி பாலனுயுள்ள எவனொ ருவன் சம்பூர்ணப்ரம்ஹசரியத்திலிருந்து பூரணவேத வித்தையைக் கற்றும், நல்லசிக்ஷையையடைந்தும், பூரணயௌவனஸ்தனுய் தனக் குச்சமத்துவமாயிராநின்றயுவ்தி விதூஷியாய், தனக்கு அநுகூலமா யுள்ள பிரியத்திற்கிசைந்தஸ்திரீயை விவாகஞ்செய்து கொள்கின்று னே அவ்விதமே கன்னிகையானவள் அகண்டிதப் பிரமசரியத்திலிரு ந்து வேதாதி சாஸ்திரங்களைக்கற்றுச் சம்பூர்ண வித்தையையும் உத் தம சிக்ஷையையும் அடைந்துயுவதியாய் சம்பூர்ண யவ்வனத்தில் தன க்குச் சமத்துவமான வித்வானுகிய பூரணயுவாவஸ்தையோடு இரா நின்ற நாயகனையடையவேண்டுவதே வேதவிதியாகும். அந்தஞாயப் பிரகாரம் அக்கல்வியானது, ஆண், பெண், என்ற இருபாலார்க்கும் உரித்தாயிருக்கின்றது, அக்காரணம் பற்றியே பூர்வத்திலிருந்த ஆரி யகிரந்தகர்த்தாக்கள் ஆடவர்அநுஷ்டிக்க வேண்டிய ஆச்சிரமாதிவிதி களையும், மகளிர்அனுசரிக்கவேண்டிய கற்புலக்ஷணதிபதி விரதாதர்ம

மர்மங்களையும் மற்ற விஷயங்களையுந் தொகுத்துப் புராணேதிகாச நூல்களாக வகுத்துப் பிராகிருத பாஷையில் வெளியிட்டிருக்கின்றார்கள். அவைகளை மற்றபாஷாபிமானிகள் தங்கள் சுதேசபாஷைகளில் மொழிபெயர்த்து உலகோருக்கு அர்ப்பணஞ் செய்திருக்கின்றார்கள். அன்றியும் பெண்களுக்கு மேற்கண்ட சுருதிப்படிக் கல்வி கற்குஞ் சுதந்தர மிருக்கின்றதென்பதற்கு சரஸ்வதியானவள் கல்விக்குத் தலைமைபூண்டு கலைமகளென்ற காரணப்பெயர் பெற்றிருப்பதே போதிய சான்றாகும். இதன்றிப் பூர்வத்திலிருந்த பெண்கள் வேதம்ஓதவும், வேதார்த்தங் கற்பித்துக்கொடுக்கவும், காயத்ரீ ஜெபிக்கவும் அதிகாரம்பெற்றிருந்தார்களென்று ஹரிதர் எழுதிய கிரந்தத்திற் கூறியிருப்பதாகவும், ஒவ்வொரு புருஷனும் தன் பெண்ஜாதியை மூன்றுகாலங்களிலும் வேதகோஷமும், தோத்திரமுஞ் செய்யச் சொல்ல வேண்டியது கடமையென்று இருக்குவேதத்திற் சொல்லப்படுவதாகவும், அத்வர்யையென்பவள் அப்ஸரஸ்களுக்கும் மற்றுமுள்ள பெண்களுக்குங் கதைகள்சொல்லிக் கல்விகற்றுக் கொடுத்ததாக சாக்யாயன சூத்திரத்திற் கூறப்படுவதாகவும், பிரகஸ்பதி பகவானுடைய புத்திரியாகிய ரோமேசை யென்பவள் வடமொழியில் (சந்தஸ்) என்ற ஓர் கிரந்தம் எழுதியிருப்பதாகவும், அத்திரி குலத்துதித்த அகத்தியர் மனைவியாகிய லோபாமுத்திரையும் விஸ்வவரையென்பவளும் ஞானப்பாட்டுகள் இயற்றியிருப்பதாக வேதங்களிற் கூறப்படுவதாகவும், அத்திரி முனியின் மனைவியாகிய அத்திரியி யென்பவள் வான்மீக முனிவரிடத்திற் கலைகளெல்லாங் கற்று வேதாந்தத்தை அகத்தியரிடங் கற்றுக் கொள்ளப்போவதாக ஒரு ரிஷியிடத்திற் சொன்ன விசேஷத்தை யறிவிக்கும்பொருட்டுப் பவபூதி யென்னும் வடமொழிக் கவிஞரும் உத்தரராமசரித்திரத்தில் எழுதிவைத்திருப்பதாகவும், இவையன்றி இராஜஸ்திரீகளில் சாவித்திரி யென்பவள் கல்வித்தேர்ச்சி யடைந்தவளென்றும், திரௌபதையானவள் தன்தாதை மடியில் உட்கார்ந்துகொண்டு ஒருபிராமண குருவிடம் கல்வி கற்றுக்கொண்டாளென்றும், ருக்மணி யென்பவள் கிருஷ்ணனுக்கு ஒருசமயம் கடிதமெழுதி யிருக்கின்றாளென்றும், அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியின் புத்திரியாகிய தெய்வயானையென்பவள் ஆடல்பாடல் கல்விமுதலிய கற்றவளென்றும் விவேகசிந்தாமணி வெளிப்படுத்துகின்றது. இன்னும் நம் தமிழ்வேத கர்த்தாவாகிய தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரின் சகோதரியான ஔவைப் பிராட்டியார் சர்வகலா வல்லியா யிருந்ததினிமித்தம் நம்

தமிழ் நாட்டுக்கு இன்றியமையாத (கணபதி யகவல், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை, நன்னூற்கோவை, நான்மணிக்கோவை, பந்தனந்தாதி, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து) முதலிய அரிய பிரபந்தங்களை யியற்றி லோகோபகாரமாய் வெளியிட்டிருப்பதே பெண்களுக்குக் கல்விச் சுதந்திரம் உண்டென்பதை நிரூபிக்கும் பொருட்டுப் பிரத்தியக்ஷ சாக்ஷியாகவும் சாக்ஷியாகவும் இருந்து கொண்டிருக்கின்றது. இக்காரணங்களாற் பெண்களும் புருஷர்களைப்போலவே கல்விகற்கப்பாத்தியமுடையவர்களென்று கரதலாமலகம்போல் விளங்குகின்றது.

(இன்னும் வரும்.) **வே. முத்துசாரி,** ஸ்டேஜ்மானேஜர்,

S S. S. V. கம்பெனி, பழனிஸ்தலம்.

விடுகதை கணிதவினா.

"செந்தமிழ்ச்செல்வ வாசகரஸிகர்காள்! தங்கள்நேயன்கோரும் விடையை செந்தமிழ்ச் செல்வத்தினிடம் அனுப்புவீர்களாக!

ஒரு வெற்றிலைத் தோட்டக்காரன் தன்மக்கள்மூவருக்கு முறையே 50, 30, 10, வெற்றிலைகள் கொடுத்து மூத்தவன் விற்கும் மாதிரி விற்கும்படிக்கும், அவன்சம்பாதிக்கும் பணம் மற்றவர்களும் கொண்டுவரவேண்டுமென்றும் சொல்லியனுப்ப; அவ்வாறே விற்று ஒவ்வொருவரும் சரியாக பணம் கொண்டு வந்தார்களெனின் அவர்கள் விற்ற விவரமும் சம்பாதித்தபணமும் அறியவிரும்பும்.

A. Kuppusamy Aiyar,

"ஸ்ரீநடராஜம்பஜே."

விடுகதை விடைவேண்டும்.

1. நாலு எழுத்துள்ள ஒருவார்த்தை அது தரையில் வசிக்கும் ஜந்தல்ல. தலையெழுத்து எடுத்துவிடின் அவயவங்களின் பெயராகும், இரண்டாம் எழுத்து எடுத்துவிடின் விருக்ஷத்தின் பெயராகும், முதலிரண்டெழுத்து எடுத்துவிடின் போதைவஸ்துவின் பெயராம். அச்சொல்லின் மூன்றும் எழுத்தில்லாவிடில் நக்ஷத்திரத்தின் பெயராகும்.

2. தலையில்லை உடலுண்டு கையில்லை காலுண்டு.

ஆன்ம இலக்கணம்.

(372-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வான்மா பாசத்தைப் பற்றுதலாலும் விடுதலாலும் கேவலம் சகலம், சுத்த மென மூன்றவத்தையினைப் பொருந்தும். அவைவருமாறு:— ஆணவமலம் ஒன்றே பற்றி அறிவு; இச்சை, செயல்கள் தொழிற்படாமல் இருட்டறையில் குருட்டுச்சிசுப்போல வருந்துவது கேவலாவத்தை. இதனை

"சனுதக் குருட்டுச் சந்ததி யிருட்டறை
வாய்ப்பட் டாங்கு மல வாய்ப் பட்டுப்
பன்னாள் ழுங்கி பருவரலுழக்கு
மனுதி கேவலத் தாருயிரம்ப"

என்னும் ஆன்றோர் வாக்கியத்தாலுணர்க. ஒரு மலத்தால் அறிவு, இச்சை, தொழில்கள் நிகழப் பெறாது அவத்தைப் படுதலின் கேவலாவத்தை யெனப் பெயராயிற்று.

இவ்வாறு மலத்தால் பிணிப்புண்டு வருந்தும் ஆன்மாவிற்கு சிவபெருமான் இரங்கிக் குருடனுக்குக் கோல் கொடுப்பது போல மாயையினின்று சரீரததைக் கொடுத்து இதாகிதமாகிய கன்மத்தையுங் கூட்டு வித்த போது சகலாவத்தை எனப் பெயர் பெறும். மும்மலத்தாலும் அவத்தைப் படுதலின் சகலா வத்தை எனப் பெயராயிற்று.

மும்மல வாதனையும் நீங்கும் படியான சாதனங்களில் உரைத்து நின்று சாதிக்குங் காலத்தும் பயனடைந்தின்புறுங் காலத்தும் சுத்தாவத்தை எனப் பெயராயிற்று.

சகலாவத்தையைப் பொருந்தி உபாதிகளோடு நிற்குங் காலத்தும் சுத்தாவத்தையைப் பொருந்தி உபாதிகள் நீங்கி நிற்குங் காலத்தும் உயிர் ஆறு தன்மையினைப் பொருந்தும். அவற்றுள் சகலத்தின் நான்கும் பூதான்மா, அந்தரான்மா, தத்துவான்மா, சீவான்மா என்பனவாம். பின்னைய விரண்டும் மந்திரான்மா, பரமான்மா என்பனவாம்.

இவற்றின் இலககணம் வருமாறு:— பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களுடன் பொருந்திய ஏனைய தத்துவங்களைப் பின்னிட்டு நிற்கும் அவதாரம் பூதான்மாவாகும்.

பிராணன் அபானன் என்னும் வாயுக்களுடன் கூடி சூக்குமை, மை சந்தி மத்திமை வைகரி என்னும் வாக்குக்களைப் பொருந்துங் கால் அந்தர ஆத்மாவாகும்.

முப்பத்தாறு தத்துவங்களுடனும் கூடி ஜீவிக்கும் அவதரம் தத்துவ ஆன்மாவாகும்.

பூதம், வாக்கு, தத்துவம் மூன்றுடனுங் கூடி சுக துக்கங்களை அனுபவிக்கும் அவதரம் ஜீவான்மாவாகும்.

பூதமுதலாகக் கூறிய உபாதிகளினின்றும் விடுதலை யெய்தக் கருதி மந்திரமாகிய சாதனத்தோடு கூடி நிற்கும் அவதரம் மந்திரான் மாவாம்.

யாவும் அறவே விடுதலை யெய்தப் பரனோடு கூடி நிற்கும் அவதரம் பரமான்மாவாம்.

இவற்றுள் முன்னைய நான்கு தன்மையினைப் பொருந்தி ஜீவிக்கும் சகலாவத்தை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தவத்தை யுடையனவாயிருக்கும், அவற்றுள் சாக்கிரவத்தை முப்பத்தைந்து தத்துவங்களுடன் லலாடத்தானத்தில் நின்று தொழிற்படும் அவதரமாம்.

சொப்பனம் இருபத்தைந்து தத்துவங்களுடன் கண்டத்தானத்தில் நின்று தொழிற் படும் அவதரமாம். சுழுத்தி, பிராணன், சித்தம், புருடன் என்னும் மூன்று தத்துவங்களுடன் இதயத்தினின்றும் தொழிற்படும் அவதரமாம். துரியம் புருடன் பிராணன் என்னும் இரண்டுடன் கூடி நாபியில் நின்றும் தொழிற்படும் அவதரமாம். துரியாதீதம் புருடதத்துவம் ஒன்றோடு கூடி நின்று மூலாதாரத்தினின்று தொழிற்படும் அவதரமாம்,

இந்த அவத்தை ஐந்தும் கீழாலவத்தை என்று கூறப்படும், மேலாலவத்தை ஐந்துண்டு அது இருதயம், கண்டம், நாக்கின் அடி, புருவநடு, பிரமந்திரம் என்னும் ஐந்து தானங்களில் மந்திரம் மூர்த்தி முதலிய வற்றோடு கூடி நின்று தொழிற் படுதல்.

மேற் கூறிய கீழாலலவத்தை ஐந்தும் பொருந்துவதாகிய நான்கு தன்மைகளும் பொது வியல்பிற் சிறப்பெனப்படும்,

இவ்வாறு ஐந்தவத்தைப் படுங்கால் இதாகிதமாகிய இருவினைகளாகிய ஆகாமியத்தைச் செய்து அது மாயையிற் கிடந்து பக்குவ மாங்காலும் புண்ணிய பாவமெனப் பெயர் பெற்று இன்ப துன்ப

மாய் அநுபவிக்க வருங்கால் பிராரத்தமென்றாகி அப்பிராரத்தம் இன்பமேயாயின் சொர்க்காதி லோகங்களையும் துன்பமேயாயின் நரகலோகத்தையும் இரண்டும் ஒத்ததாயின் இம்மண்ணுலகத்தையும் பொருந்தி அங்ஙனம் அநுபவிக்குங்கால் அநுபவம் வினைக்காரணமாக இறைவன் செயலெனக்கருதி தன் செயலெனக் கருதும் அகங்காரத்தால் மேலு மேலும் வினைகளை யீட்டி தேவர் முதலாகிய யெழுவகைப் பிறவியைப் பெற்றும் பிறந்திருந்துழலும் ஆன்மா அவற்றினின்றும் நீங்கி இன்பமடைய விரும்பி நூல்வழியாக தன்றன்மையும் தன்னோடு அந்தரியாமியாயுள்ள இறைவன் றன்மையும் அவ்விறைவனைத் தனக்குத் தெரிய வொட்டாது மறைத்து நிற்கும் பாசத்தின் றன்மையும் ஆராய வரும். வரவே பாசத்தினின்றும் நீங்கி பதியை யடைவதற்கு அங்ஙன மடைந்துள்ள ஒரு பெரியாரை ஆசிரியனாகப் பெற்றாலன்றி முடியா தெனத் தோன்றும். தோன்றவே தலையில் நெருப்புப் பற்றிய ஒருவன் தண்ணீரையே யன்றி பிறிதொன்றையும் நாடாததுபோல் சரீர சம்பந்தமான ஒன்றிலும் விருப்பில்லாதவனாய்

> "உலகமு மாழையு மொண் கண் மாதரு
> நிலைபல வென்றுணர் நெடிய மாணவன்
> கலையெலாந் தெரிந்தவன் கதிவிருப்பின்
> னலமலிகுரவனை நாடித் தேடுவன்."

"உலக நெருப்பைக் கடந் தொழியா ஞான வுத்தி மடுப்பேனோ
விலகு குடும்பத்துயர் நீங்கி யெந்நாட் டுறவி யாவேனோ

(இன்னும் வரும்.)

பொ. முத்தையபிள்ளை,
சைவப்பிரசாகார், தூத்துக்குடி.

திருப்பெருந்துறை விளக்கம்.

(352-ம் பக்கத்தொடர்ச்சி)

திருப்பெருந்துறை மேல் நாட்டிலிருப்பதாகத் திருவாசகத்திலேயே அருளப்பட்டிருப்பது போல நம் ஐயாவர்களும் பிள்ளையவர்களும் கூறுவது உண்மையல்லவென்பதைப் பற்பல பிரபல பிரமாண் முகத்தால் இதுகாறுங் காட்டினோம். இனி 8வது சங்கையை அதாவது மாணிக்க வாசக சுவாமிகள் திருப்பெருந்துறைக்குச் சென்றபோது மார்க்கத்தில் அநேக வனம் மலைகளைக் கடந்து அத்

தலத்தை யடைந்ததாகப் பரஞ்சோதியார் திருவிளையாடற் புரா ணத்திலும் திருவாதவூரார் புராணத்திலும் சொல்லி யிருக்கிறபடி மேலைச் சமுத்திரக் கரைக்குப் போம் மார்க்கத்திற்றான் மலைகளுங் காடுகளுமிருக்கிற தென்றும் ஆனதினால் மேற்குத் திக்கை நோக்கி மலையாள நாட்டிலுள்ள கடற்றுறைப் பட்டினத்துக்கேதான் சுவாமி கள் சென்றிருக்க வேண்டு மென்றும் ஐயரவர்கள் கூறுவதை யாராய்ச்சி செய்வாம். இவ்வாறு கூறுவது ஐயரவர்கள் சொந்த அபிப்பிரா யமே யொழிய புராண ஆதாரமற்றது. ஆரம்பமுதல் இதுகாறுங் காட்டிய பூர்வீக நூன்முகப் பிரமாணத்தால் கீழ்த்திக்கை நோக்கிக் கீழச்சமுத்திரக் கரைக்கே சுவாமிகள் சென்றிருப்பதாக விளங்கு வதை ருசிப்பித்துச் சித்தாந்தப் படுத்தினோ மானதால் மார்க்கத்தில் வனம் மலைகளைக் கடந்து சென்றதாகப் புராணங்களிற்சொல்லியிருப் பதை அந்த முடிபுக்கு ஆதாரமாயுள்ள பிரமாணங்களுக்கு விரோத மன்னியிலே பொருள்கொள்ள வேண்டுவது அறிவுடையோர் கொள் கை. ஏனெனில் ஒரே கிரந்தகர்த்தா ஒன்றுக்கொன்று முரண்படப் பகரார்கள். பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தில் "பொ ருங்கடல் வீகமொடுபோய்ப் புறவடுத்த விருங்கட மளப்பில்கடந்து." என்றருளியிருக்கிற செய்யுள் வாக்கியமும், திருவாதவூரார் புராணத் தில் "நெடுங் குட திசைக் கடல் நிறைந் தொலி சிறந்தே- யுடை ந்து தயநற் றிசையிலுற்று வருமாபோல். மிடைந்த பதியுங் கடபூம் வெற்புமிவை யெல்லாங் கடந்து வதிசெனறு பலகாவதமகன்றார்" என்ற செய்யுளுமே, வனம் மலைகளைச்சுவாமிகள் கடந்து திருப்பெ ருந்துறையை யடைந்ததாகச் சொல்லுவதற் காதாரமான வைகள் இச்செய்யுட்களால் மதுரையினின்று கீழ்த்திசையை நோக்கி நகரங் களையும் வனங்களையும் வெற்புகளையுங்கடந்து சுவாமிகள் சென்ற தாக வேற்படுகிறது. சுவாமிகள் சென்ற மார்க்கம் காளையார் கோ விலென்ற திருக்கானப் பேரென்னுந் தலத்தின் வழியென்று முன் னமேயே மேற்கோள் பிரமாணங்களுடன் காட்டினோம். இக்காலத் திலும் இத்தலமார்க்கம் ஒருவர் திருப்பெருந்துறைக்குச் சென்று மார்க்கங்களைக் கவனித்தால் திருக்கானப்பேருக்குச்சமீபமும் மற்றும் மார்க்கங்களிலுஞ் சிலகுன்றங்களையும் பரவுகாடுகளையும் பார்க்கலாம். திருக்கானப்பேர் என்ற தலத்தின் நாமமே காடு சூழ்ந்தபதியென்ப தைக்குறிக்கிறது. இக்கானப்பேரிலுறையுமண்ணலை அநேகம் பெண் யானைகளுடன் ஓர்யானை ஆதியில் பூசித்த தாகத்தலமகிமையே ற்பட்

டிருக்கிறது. "பிடியெலாம் பின்செலப் பெருங்கை மாமலர் தழீஇ விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடுங் கடிபுலாம்பூம் பொழில் கானப்பேரண்ணல்," "மானமாமடப் பிடிவன் கையாலலகிட்ட கான மார் கடகரி வழிபடுங் கானப்பேர்" எனுந்திராவிடச்சுருதிவாக்கியங் களே இதற்குப்பிரமாணம் இன்னமும் இக்கானப்பேரெனுந்தலத்தை "தலையினார் புறவிற்றேள் கமழ் தருகானப்பேர்" எனத்திராவிடச்சுருதியில் நாட்டுவளங்கூறுவதால் இத்தலம் புறவையடுத்த காடு சூழ்ந்த தலமென்றே யேற்படுகிறது. ஆனால் மேற்கே மலையாளநாட்டுக்குச்செல்லும் மார்க்கத்திலுள்ள பெரிய பர்வதங்கள் ஆரணியங்கள் போல் இம்மார்க்கத்தில்லை. மலையாளநாட்டுக்கு மலைநாடென்றே பெரியோர்களால் பரிபாயநாமங் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறிருக்க வேண்டு மென்றெண்ணுவது பிழைசிறு குன்றுகள் காடுகளிருக்கினும் நஞ்சித்தாந்தத்துக்குப் போதுமானதே அவ்வாறு பிரத்தியட்சத்திலுமிருந்து கொண்டிருக்கின்றன. யானைகள் வசிக்கும்படியான காடுகள் சூழ்ந்ததாயுள்ள திருக்கானப் பேரெனுந்தலம் பூர்வத்திலிருந்திருக்குமாயின் அக்கானக மெத்தன்மையாயும் எவ்வளவு விஸ்தீரணமாயுமிருந்திருக்கவேண்டு மென்பதை நம் நண்பர்கள் செவ்வனே கருதவேண்டும்.

நந்தமிழ்வாணர்கள் நாடு நகரங்கள் நிலப்பகுதிகள் முதலியவற்றைச் சிங்காரமாய் வர்ணிப்பதில் மிகவும் சிறந்தவர்கள். அவ்வாறு அலங்காரப்படுத்திச்சொல்ல தமிழிலக்கணநூல்களுமிடந்தருகின்றது சுமார். 100 வருடங்களுக்குமுன்னியற்றியிராநின்ற தமிழ் ஸ்காந்த மகா புராணத்தில் ஸ்ரீ குமாரக்கடவுள் சோழநாட்டிலுள்ள திருச்சேய்ஞ்ஞலூரெனுந்தலத்தை நீங்கிப் பாண்டிநாட்டிலுள்ள திருப்பரங்குன்றத்தை நோக்கிச்செல்லுங்கால் மார்க்கத்தில் மிகக்கொடிதான பாலை நிலமிருப்பதாக மிகவியப்போடு அப்புராணமியற்றிய ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியசுவாமிகள் வர்ணித்திருக்கிறார்கள். திருப்பெருந்துறைத் தலபுராணத்தில் மதுரையைவிட்டுத் திருப்பெருந்துறை செல்லுமார்க்கத்தில் குறிஞ்சி முதலிய ஐந்திணைகளுமிருப்பதாக ஒவ்வொரு நிலப்பகுதியையும் வித்தாரமாயெடுத்தாண்டிருக்கிறது. "மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றபடி கவியலங்காரங்களை யொழித்து உண்மை நோக்கம்வைத்து முன்பின்முரணுறு பொருள் கொள்வது ஆராய்ச்சிக்கழகு ஐயரவர்கள் யெடுத்துக்காட்டிய இருபுராணங்களும் இது விஷயமானவடமொழி தென்மொழியிலுள்ள மற்றசமஸ்தநூல்களும்

மாணிக்கவாசகசுவாமிகள் மதுரையினின்று காடுமலை நகரங்களைக்கடந்து மேல் நாட்டுக்குச் சென்றதாகக் கூறிற்றில ஆனாலோ காடுமலை நகரங்களைக்கடந்து கீழ்த்திசை நோக்கி குணகடலுக்குச்சென்றதாக வெள்ளிடைமலைபோற்கூறுவதால் இவ்விஷயத்திலும் ஐயரவர்கள்கூற்றுப் பயன்படவில்லை. இனியும் விரிக்கிற் பெருகுமானதினால் இம்மட்டோடு இவ்விடயத்தை நிறுத்தி மேல் சங்கையை யாராய்வாம்.

(இன்னும் வரும்) திரு-சாம்பசிவம்பிள்ளை.

சைவசித்தாந்த சாதனம்.

(380-வது பக்கத்தொடர்ச்சி)

"பண்டிதராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறிவா ரென்ற
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்டமுதலா னரன் சொன்னவாறே,"

'தமிழ்' 'ஆரியம்' பற்றியே பதினெட்டுப் பாஷைகள் விரிந்தன மற்றபாஷைகளும் இனி ஏற்படும் பாஷைகளும் அப்பதினெட்டிலடங்கிக்கிடக்குமன்றோ இந்த உண்மையறியாமல் பலர் கத்தை கத்தையாகக் காலநிர்ணயங் கற்பிக்கிறார்கள், 'ஆரியந்' 'தமிழ்' பாஷைகளுக்கே. 'ஆரிய' பாஷையிலுள்ள வேதங்கள் (தற்கால இருக்காதி நால் வேதம்) ஆறு'புறச்சமய'ங்களாகிய வுலோகாயதாதி பாஞ்சராத்திரியீறுகவுள்ளவற்றை வலியுறுத்துங்கண்டீர்.

19. (1) இனிதற்கால இருக்காதி நால்வேதங்களுக்கும் முற்கூறிய 'அனாதிகலையாகம வேத'ங்களாதாரம் பற்றிவந்த நஞ்சைவசித்தாந்தத்துக்கும் உள்ள வேறுபாடுகளைப்பற்றிச் சோதிப்பாம்.

1வது 'தமிழ்மறை' யாகிய 'வவ்வனாதிகலையாகம வேதத்தில், 'சிவபோதக உபதேசம்' செய்யுஞ் சோபான முறையாகிய தீட்சாக்கிரமம், அதாவது, சமயம், விசேடம், நிர்வாணம், அபிஷேகம், இந்நால்வகை சோபான தீட்சைகளும், அவகளை நடத்தும் விவரமும் அவைகளுக்குரிய சிவாலய விஷ்ணுவாதி பரிவார தெய்வங்களின் பிரதிஷ்டாவிதிகளும், விவரமும், கூறப்பட்டுள்ளன. தற்கால இருக்காதி நால்வேதத்திலாவது, அதுபற்றி வந்த உபநிடதங்களிலாவது அவைகள் கூறப்படவில்லை. அவைகளைச்சுட்டவுமில்லை.

2-வது சிவதீட்சா முறைகளில் 'கலாசுத்தியும்', ஆறத்துவா சோதனையும், இலக்கணமும் மேற்கூறிய 'தமிழ் மறையில்' கூறப்பட்டுள்ளன. ஆனால் மேற்கூறிய 'இருக்காதி நால்வேதத்தில்' அவைகள் கூறப்படவில்லை. அவைகளைச்சுட்டவுமில்லை.

3வது ஆரிய உபநிடதங்களில் மொகலாய சக்கிரவர்த்தியின் தபவைக்கோரிச்செய்ததாக ஏற்படும் 'அல்லோபநிடதம்'ஒன்று வழங்குவதைக்காணவே, சமயோசிதமாய்ச் சமயத்துக்கும் அதிகாரிக்கும் தக்கபடி ஆரியமுனி புங்கவர்கள் உபநிடதம்செய்து தந்திருப்பதாகக் கொள்ளற்பாலதுகண்டீர். ஆகவே சைவாதிகாரிகட்குத் தக்கபடிசிவ உபநிடதங்களும், வைணவ அதிகாரிகட்குத்தக்கபடி வைணவோபநிடதங்களும் ஏற்பட்டிருக்கலாங்கண்டீர். ஸ்வேதாஸ்வதரமுதலிய உபநிடதங்கள் இவ்வாறு பிறந்திருக்கலாமே யொழிய, தற்கால இருக்காதி நால் வேதத்தின் கருத்தை யவ்வகைய உபநிடதங்களிற் கூறியதாகவறைவது கிஞ்சித்தும் பொருந்தாததாகுங் கண்டீர். உலோகாயதம் முதல் பாஞ்சராத்திரம் ஈருகவுள்ள ஆறுபுறச்சமயங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் உபநிடதங்களெல்லாம் இவ்வாறேயேற்பட்டிருக்கலாங் கண்டீர். இத்தகைய சமயோசிதானுட்டானங்களும், விதிகளும்,உபநிடதவாக்கியங்களும். 'அநாதிகலையாகமவேத'மாகிய 'தமிழ் மறையில்' ஒருக்காலும் புலப்படாவாங்கண்டீர். 'தமிழ்மறைக்கிணங்காத தற்கால இருக்காதி நால்வேதமும் மேற்காட்டிய உபநிடதங்கள் போலவே 'புறச்சமய நால்வேதம்' என்றுணர்த்தவே மேற்கூறிய பேதங்களைக்காட்டினேன் தெளிவாளிகள் பின்னுஞ் சிந்தித்துத் தெளியவுறுத்துவேன். (இன்னும் வரும்.)

ஹ ர. ஷண்முகமுதலியார்,
சைவசித்தாந்தி சேலம்.

அதிரச விகடத் துணுக்கு.

ஒருவனை அவன் பெண்சாதி "அடா பாவி, உன்னைக்கட்டிக்கொண்டு நான் என்னபலனைக்கண்டேன்" எனவும் "அடீ பாவித் தியக்காரி, இப்படி அழும்பலனையாவது காணவில்லையா" என்றுநகைத்தானும்,

ஒருநாள் படுக்கையில் "ஐயோ பாம்பு" என்று மனைவி கூவினள். "சீக்கிரம் வெளியே பாராவது புருஷாள் இருந்தால் அழைத்துவா அடிக்கலாம்" என்று புருஷன் சொன்னான். "அப்படியாயின் நீங்கள் புருஷாளல்லவா" என்று அவள் கேட்க, "அப்படியானால் கம்பு எடுத்துவா, அடித்துப் பார்க்கலாமென்றான், "அடே யப்பா!!! என்ன புருஷன் இவன்.

P. C. Panchanatham,

ஈதற்காரணமும் அதன் பயனும்.

ஈதல் இசைபடவாழ்தல் அதுவல்லது
ஊதியமில்லை உயிர்க்கு. (திருக்குறள்)

கடலாடை சூழ்ந்த இக்காசினியிற்றோன்றும் மாந்தர் அனைவர்க்கும் வயது நூறல்லதில்லை. அவர்கள் இளமையோடிருப்பது மூவைந்தாண்டுகளேயாம்.

யாக்கை, இளமை? இவற்றிற்கு ஓர்காலவரை ஏற்பட்டிருப்பது போல, செல்வத்திற்கு இதுவரை எவராலும் குறிக்கப்படவில்லை. இதுபற்றியன்றோ நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி யெனச்சிறப்பிக்கப்பட்டு சங்கமருவிய நீதிநூல்களிற் சிறந்ததெனக்கொண்டாடப்படும். நாலடியாரில் முதல்அதிகாரத்தில் செல்வநிலையாமை கூறுகின்றார், அதில் செல்வம் ஒன்றுண்டாகவைக்கற்பாற்றன்று, அது சகடக்கால் போலவரும் என்றுரைத்திருப்பது கருதத்தக்கது. மேலும் பாவலர் பலரும் சமத்காரந்தோன்ற அது நிலையில்லாதது என்று பொருள் படுமென்பதைப் பலருக்கும் விளங்கச்செய்ய, செல் (வோம்) வம் என்றனர். இது உண்மையன்றென மறுக்க ஒருவராலும் ஒண்ணாது. ஆதலின் இத்தகைய செல்வப்பேற்றை நனிபெற்ற சக்ராதிபதிகளும், சீமான்களும், தாங்களே தட்டின்றி எக்காலும் அனுபவித்தல் ஆகும் என்றெண்ண இடமில்லை. இதனையறியாமாக்கள் தனத்தைத்தாங்களே துய்க்கவேண்டுமென்ற பேரவாவுடன் மேன்மேலும் சேர்த்தனுபவியாது வைக்கின்றனர். எங்ஙனம் வண்டுகள் வருந்தித் தேடிப் பின்புசிப்போம் என்றீட்டிவைத்த தேனை, கானக்குறவன் கவர்ந்துகொள்கின்றானோ அங்ஙனமே அவர்களது பொருளை அடித்துக்கொண்டு விடுவர் என்பதை யவர்கள் அறியார்போலும். பேரழகு வாய்ந்த இளம்பெண்ணை யனுபவியாது இல்லின்கண்ணே சேமித்து

வைத்தால்பிறகொருவனையவள்நாடிச்சென்றுசுகங்கொடுப்பள். இஃது உலகவியற்கை. ஆதலின் பொருளைப் படைத்த பிரபுக்கள் அதனைத் தாங்கள் அனுபவித்தும், தங்கள் கேளிர் துயர்களைக் களைந்தும், வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது ஈந்தும், அங்ஙன மளித்தலால் ஒளியும் புகழும் பெறுதலுமே உயர்ந்ததென வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு பிறர்க்குதவியாக்குபவர் பேறும் என்பது நீதிநெறி. இவ்வுலகில் நிதியைப்படைத்தவர் தொகைமிகச்சிறிதாகவும், பொருளைப் பூர்வபூஜா பலத்தால் பெறாதவர் எண்ணிக்கை கணக்கற்றதாகவும் இருக்கின்றதென்பதை எல்லோரும் அறிந்திருக்கலாம். அறிந்திராது போனால் அறியவேண்டியது ஆவசியகமே, ஆகவே பாம ஏழைகள் பிரதி தினமும் பிட்சை யெடுத்தே தங்கள் குட்சியை நிரப்பிக்கொள்ளக்கூடும். தியாகம் என்றுவரும் திக்கற்றவர்களை நாஸ்தி யென்றனுப்பி விட்டால் அவர்கள் பசிப்பிணியால் பாதவித்து தென்றிசைக் கிறைவனை யடைய வேண்டியதேயொழிய வேறுவழியில்லை. அற்றாரை அல்லற்படும்படி ஆதரியாது விடுவது அரும்பாவமேயாம். "ஏற்றகை மாற்றாமை என்னாலும் தாம் வரையாது ஆற்றாதார்க்கு ஈவதாம் ஆண்கடன்" என்ற ஆன்றோர் முதுமொழியும் மறக்கற்பாலதன்று. "அந்தோ! நான் அரும்பாடு பட்டுப் பணத்தைத்தேடினேன் அது எனது என" தென்றிருக்கலாமா? செல்வம் அறகாவியல்பிற்றல்லவா? அதுபெற்றால் அற்குப ஆங்கேசெயல்வேண்டாமா? வள்ளன்மை யில்லானிடத்துச் செல்வமிருப்பதைவிட தாரித்திரம் குடிகொண்டிருப்பது மேல். ஏனெனில் அப்பொருளும், அருளும், அனைவரும் அவனையிகழார், யாவர்க்கும் உண்பதுநாழி உடுப்பது நான்குமுழம். செல்வத்துப்பயன் ஈதலே, செல்வவானிடம் சென்று "ஈ என" விரத்தல் இழிவு "ஈயேன்" என்றல்அதனினும்இழிந்தது. வடமொழியில்ஒர்கவி "யாசகன்செல்வவானையடுத்து ஏற்கப்போகவில்லை, ஆனால் ஐயா! யான்முற்பிறப்பில் திரவியத்தை ஏராளமாகச் சேர்த்தேன் பிறக்கும்பொழுது உடன்கொண்டுவந்தது ஒன்றுமில்லை, இறக்கும்பொழுதும் கொண்டுசெல்வது எதுவுமில்லை வினைப்பயனைத்தவிர. அற்றார் அழிபசிதீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி, என்னும் நீதிகளையுணராமல் சிவன்றந்தஸம்பத்தைப் பொருளற்றறித்திய தரித்திரர்களுக்குக் கொடுக்க மனமிசையாததால் இக்காலை தங்களை நோக்கி, எண்ணான்கு பற்களைக் காட்டி, இருமலர்க்காம் விரித்து நீட்டி, பிச்சை பிச்சையென்று கூவி

ப்பேசி, ஏங்கி, இரங்கி நிற்கலானேன். ஆதலினால் "என்னைப்போல் உலுத்த குணத்தோடிருப்பவர் இக்கதியையேயடைவர். இது உண்மை! உண்மை!!" என்று கூறச்செல்வதாக வெகு அழகாய்ப் புத்தி புகட்டுகிறார்.

இன்னும் வரும்

M. S. Subramanian.

பக்தி.

அறிவிற் சிறந்த நந்தமிழ் நேயர்காள்!

பக்தியென்பது பொதுவகையானோக்குமிடத்து அன்பு எனப் பொருள்படும். அவ்வன்பானது தான் நிகழ்தற்குரிய பொருள்களின் தன்மைக்கேற்பப் பலவகைப்படக் காண்கின்றோம். எவ்வாறெனின் அடிமையிடத் துண்டாவதாய அன்பினால் தயையும், மனைவியிடத்து ண்டாவதாய அன்பினால் காதலும், மக்களிடத்துண்டாவதாய அன்பினால் ஆர்வமும் (பாசமும்), தோழனிடத்துண்டாவதாய அன்பினால் நேசமும் (நட்பும்), தாய், தந்தை, குரு ஆகிய இம்முக்குரவர்களிடத் துண்டாவதாய அன்பினால் வணக்கமும், கடவுளிடத்துண்டாவதாய அன்பினால் பக்தியும் தோன்றுவதுண்மை. அவ்வவ்விடங்களிலும் பற்றி நிற்கும் மனம் ஒன்றேயாயினும், பற்றப்படும் பொருள்களின் தகுதிகளுக்கேற்ப உள்ள நெகிழ்ச்சியும் மனோபாவனைகளும் வேறாகிப் பல்வேறு தொழில்களை இயற்று நிற்கின்றது. அன்புள்ளவரைக் காண நேருழி காணுங்கருவியாகிய அக்கண், தன்னுள் நீர்சுரந்திடுதலும், சுவையுள்ள பொருள்களைக் காண நேருழி சுவைக்குங் கருவியாகியதால் (நாக்கு) தன்னுள் நீர் சுரந்திடுதலும், அழகிய இளமகாரை (மக்களை) மெய்யாரத் தழுவுழி பரிச உணர்சியுடைய உடலம் மயிர்ச்செறிவுறுதலும் இது போன்றன பிறவும் மேற்காட்டிய விடயத்திற்கு அனுபவ சித்தமான உண்மைச்சான்றாம். நிற்க, இத்தகைய அன்பு பலவற்றுள்ளும் சிறந்தது கடவுளிடத்துப் பாராட்டப்படுவதாய பக்தி என்பதேயாம். அப்பக்தி ஆசான்முகத்தால் தோன்றப்படுவதாகும். அவ்வாசானுந்தந்தையினாலடைவிக்கப்பட்டு, அத்தந்தையும் தாயினாலுணர்த்தப்படல்வேண்டும் காரணம் பற்றியே தாய், தந்தை, குரு ஆகிய மூவரையும் முக்குரவரென ஆன்றோருரைப சரித்தபடியாம். இனியப் பக்தியினால் ஞானமும் ஞானத்தினால் மோட்சமும், அடைதற்பாலனவாம். அப்பக்தியும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பகுதியினையுடையதாய், முறையே, சாலோக, சாமீப,

சாரூப, சாயுச்சியம் என்று சொல்லும்படியான நாற்பதவிகளையும் அடைவிக்கும். ஒன்றினைவிட மற்றொன்று சிறப்புடையது என்பதாய் கீழிட்ட மூன்று பாதங்களையும் கைவிட்டு நான்காவதாகிய சாயுச்சியத்தினைத்தரும். ஞானத்தையே முதற்கண் பெறமுயல்வோமெனின் அது கூடாது. ஒன்றைவிட மற்றொன்று எத்துணை சிறப்பினவோ அத்துணைமேலிட்ட ஒவ்வொன்றிற்கும் கீழிட்டபடிகளின் சம்பந்தம் இன்றியமையாததும் மூலகாரணமுமாம். இச்சம்பந்தந்தோன்றவே,

"விரும்பும் சரியை முதல் மெஞ்ஞான நான்கும்
அரும்பு, மலர், காய், கனி, போலன்றோ பராபரமே."

எனச்சைவத் திருவாளராகிய ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளினர். அரும்பினால் மலரும், மலரினால் காயும, காயினால் கனியும், எப்படி ஒன்றற்கொன்று சிறப்பினவும், ஒன்றிற்கொன்று சம்பந்தமும், ஒன்றில் வழி (ஒன்றில்லாதவிடத்து) மேலிட்ட மூன்றுமிலதாமோ அவ்வாறே சரியையினால் கிரியையும், கிரியையினால் யோகமும், யோகத்தினால் ஞானமும் ஒன்றினைவிட மற்றொன்று சிறப்பினவாயும், ஒன்றினுக்கொன்று இன்றியமையாச் சம்பந்தமுடையனவும், ஒன்றில் வழி ஏனையமூன்று மிலதாகவு முடிகின்றன.

ஆதலின், சரியையாதி நாற்பாதங்களையும் ஒருவன் முறையே அநுட்டித்தாலன்றி முத்தியடையப்பெறான். அச்சரியையாதிகளை யநுட்டிப்பதற்கு தெய்வமுண்டெனும் நம்பிக்கையும் அதன் வழி மெய்ப்பக்தியுமே முதற்காரணமாம். அப்பக்தியே முக்திக்கு வித்தாயிடுதலின் அஃதில் வழி எவர்க்கும் எஞ்ஞான்றும், எப்பயனும் எய்தற்கின்று. அத்தகைய பக்தி யொருவருக்குத் தன்னிச்சையாய்க் கிடைப்பதோ ஆசாரியரினால் கிடைப்பதோவெனில் இருவகையானுமன்று ஆசாரியர் துணைக்காரணமன்றி முதற்காரணமாகார்.

J. N. Somu.

(இன்னும்வரும்)

EMPIRE OF INDIA LIFE ASSURANCE Coy. (LTD.)

BOMBAY.

Advantages: Purely Indian; Absolute Government Security: Premiums lower than English or Foreign Companies; High Surrender Values; Loans 6%; Quick settlement of claims &c.

பலதேச வர்த்தமானம்.

ஆகாயக் கப்பலில் விவாகப்பவனி:—மேஸ் டிரும் என்னும் ஓர் பிரான்சியன், பிரான்சிலிருந்து ஆகாயக் கப்பல்மார்க்கமாய் இங்கிலாந்துக்கு மணக்கோலத்தோடு சென்று விவாகம் முடித்து அப்பால் அந்த ஆகாயக் கப்பலிற்றானே மணவாளியையு மேற்றி யழைத்துக் கொண்டு பிரான்சுக்குச் சென்றனன்.

கிழவனுகாதிருப்பதற்கான ஒரு புது முறை:—மேட்சினிகால் என்னும் ஒரு பிரபல டாக்டர் கிழத்தன முண்டாவதற்குக் காரணம் தேகத்திலுள்ள சிலசிறுபுழுக்களின்விஷமேயாமென்றும், அப்புழுக்கள் சர்க்கரையில் பிழைத்திருப்பதில்லையென்றும், தேகத்தில் சர்க்கரையுண்டாகுமாயின் இப்புழுக்களிறந்து போமென்றும் டாக்டர்கள் கூடிய ஒருபெருஞ்சபையில் கூறினர். இவர் தேகத்தில் சர்க்கரையை யுண்டாக்கக்கூடிய புழுக்களைக் கண்டுபிடித்திருக்கின்றார். இப்புழுக்களை அவர் ஒருவெள்ளை எலியின்மீதுவிட்டுப் பரீட்சைசெய்து பார்த்தார். அதற்குக் கிழத்தன முண்டாக வில்லையாம் இனி யப்புழுக்களை மனித சரீரத்திற் செலுத்திப் பரீட்சை செய்ய வுத்தேசித்திருக்கிறாராம்.

பூகம்பவிபத்து:—இத்மாதம் ஐரோப்பா கண்டத்தின் கீழ்ப்பாகத்தில் ஓர் பூகம்பமுண்டாயிற்று. **கான்ஸ்டாண்டி நோபிலின்** அருகேயும் ஒருநீடித்தபூகம்பமுண்டாயிற்று. **சோர்லு** என்னுமூரில்பூகம்பத்தால் ஒரு விளக்குக் கூண்டு விழுந்து விட்டது. 300 வீடுகள் தீப்பற்றி விழுந்தொழிந்தன. **மார்மோராக்** கடலில் தென் கரையிலுண்டான பூகம்பத்தால் அநேக கிராமங்கள் பாழ்பட்டுப் போயின; அளவிறந்த பேர் மாண்டனர். **சாணக்கி** லுண்டான பூகம்பத்தால் அங்கொரு கிறிஸ்துவக்கோயிலும் மகம்மதிய மசூதியு மிடிந்துபோயின. கானோவிலும் ஹோராவிலுமுள்ள கடற்கரை விளக்குக் கூண்டுகள் பூகம்பத்தால் இடிந்துவிழுந்து பூமிக்குள் மறைந்துபோயின, அங்கு அநேக கிராமங்கள் தீப்பற்றி யெரிந்தொழிந்தன., ஹோராவில் 80 பேரிறந்தனர். 300 பேர் காயமடைந்தனர். மிரியோபி யடாவில் 300 பேரிறந்தனர். 600 பேர் காயமடைநதனர். அங்கு இரண்டு கிராமங்கள் பூமிக்குள் மறைந்துபோயினவென்று தெரியவருகிறது.

ஸ்டாம்புவிற்பனை:—சென்னை ராஜதானியில் சென்ற வருஷத்தில் 1 கோடியே 27 லெட்ச ரூபாய்க்கு மேற்பட ஸ்டாம்பு விற்பனையாயிருக்கின்றது.

சீதாகுண்டத்து மகந்துவாகிய ஜதீந்த்ரவான் என்பவர் சென்ற மாதம் 6-உ 2-மணி வரையில் சீதாகுண்டத்திற் சுடப்பட்டார். கொலைஞனகப்படவில்லை. கோவில்திகார விவகாரமே கொலைக்குக் காரணமாம்.

மாணிக்கவாசகர் அண்டு கோ.

வீடுகட்டுவோர்கள் கவனிக்கத்தக்கது! மிக முக்கியமானது!! இதுவே தக்கது!!!

தாம்வீடோ கூடமோ, மாடமோ, கோயிலோ, உப்பரிக்கையோ, மாளிகையோ, கல்விச்சாலையோ, சத்திரமோ கட்டவிரும்புவோர்கள் நிலத்தின் அளவும் தன்மையும் எமக்கு எழுதி அனுப்பி அவர்கள் விருப்பத்தையும் எழுதியனுப்பினால் எல்லாச்சவுகரியத்தையும்கவனித்து மனையடி சாத்திரத்துக்கும் ஆங்கிலசுகாதாரமுறைக்கும்ஏற்றதாய் மிக்க அழகுடையதாய் அதிகசெலவின்றிக்கட்டுதற்குஏற்றபிளானும் ஜாமான்களும் எஸ்டிமேட்டும் தயார்செய்தனுப்புவோம். நெடுங்காலமாக தலைமை டிராவ்ட்ஸ்மேன்ஆக வேலைபார்த்த வல்லவர்களால் இக்கம்பெனி ஏற்பட்டிருக்கிறது, இதற்கு நூற்றுக்கு ஒருரூபாய்வீதம் எங்களுக்குகொடுத்தாற்போதும். வெளியூர்களுக்குப்போய் நிலஅளவை தன்மைமுதலியவைகளை கவனிக்கத்தக்க ஆட்களைஏற்பாடுசெய்வோம். அவர்களுக்கு ரயிற்செலவும் படியும் கொடுத்தாற் போதும். வேண்டிய விஷயங்களுக்கு செந்தமிழ்ச் செல்வம் பத்திராதிபருக்கு எழுதிக்கேட்டுக்கொள்ளவும் ஆபீஸ் விலாசம் சீக்கிரத்திற் றெரிவிப்போம்.

மாணிக்கவாசகர் அண்டு கோ.

c/o பத்திராதிபர், செந்தமிழ்ச்செல்வம், திரிசிரபுரம்.

வீரியவிருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்பு படுத்துவத்தையும் திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான இவ்வடு உயர்ந்த ரத்னஔஷதங்கள்

மதன மஞ்சரி மாத்திரைகள்.

"நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும் ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை"

1. இவை ஜீரண சம்மந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.

2, இரத்தத்தை சுத்திகரித்து விருத்திசெய்து தேகத்திற்கு நல்லதிடத்தையும் மேனியையுங் கொடுப்பவை.

3. உடம்பில் ஏற்பட்ட எவ்வித நரம்புத்தளர்ச்சியையும்நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுத்துவத்தை அளிக்கத்தக்கவை.

4. கை, கால், கண் எரிச்சலைப் போக்கடித்து மூளையைக்குளிரச்செய்து ஞாபக சக்தியை விஷேஷித்து தருபவை.

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கற்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

நபும்ஸகத்வாரி கிருத்

இக்காலத்தில் சாதாரணமாகவாலிபர்களுக்கு சகவாஸ் தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜனனேந்திரியநரம்புத்தளர்ச்சிக்கும் ஆண்தன்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்.

தோலா கொண்ட டப்பியின் விலை ரூ. 1

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரியமுண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள் ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள் ஜமீந்தார்கள். அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கான ஸர்டிபிகேட்களை நாங்கள் கேட்டாமலும், கேளாமலும் அனுப்பியிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றிலும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும் ஐசுவரியத்துக்கும க்ஷேமத்துக்கும் பெரிய வழி காட்டியாகும்.

இங்கிலீஸ், தமிழ், தெலுங்கு குஜராத்தி, முதலிய எந்தப் பாஷையில் வேண்டுமானாலும் இந்த புஸ்தகத்தை இனமாக தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன

'ராஜவைத்திய நாராயண்ஜி கேசவஜி.

புரோப்ரைட்டர் ஆயுர்வேதோதய ஔஷதசாலா.

No. 171, சைனாபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை

A GIFT TO STUDENTS.

Look Sharp! **Fair Opportunity !!**

THE SHORTHAND TYPEWRITING INSTITUTION.

TRICHINOPOLY.

This institution is situated at No. 49

JAFFER SAHIB STREET, TRICHY FORT

UNDER THE NAME OF

THE GEORGE TECHNICAL INSTITUTION,

OPENED ON THE 1st SEPTEMBER 1912.

Shorthand Typewriting and other Technical Subjects are taught in this Institution by efficient teachers Students are coached up for Government and other incorporated Examinations. They are trained not only for these examinations, but also taught how to make Typewriter a livelihood. **Mechanism and Shorthand a speciality**

Fees are and can be paid by instalments, concessions will be given to students who are clever and to those who cannot afford to pay their fees and are certified by any Gazetted Officer to that effect. Prizes will be given to those who pass in the First Class.

All kinds of Job works will be undertaken and delivered promptly with neat execution.

Shorthand and Tspewriting Requisites can be had here.

For Particulars Apply:—

V. JAYARAM NAIDU.
Manager,

இனும்! இனும்!!

தபாற்செலவுமில்லை. விலையுமில்லை.

நீங்கள் இல்லறத்தில் அல்லல் நீங்கி நீடித்த சுகவாழ்வைப்பெற விரும்பினால் உடனே உங்கள் விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஸ்திரீ சமாசம்.

என்னுமோர் சிறந்தபுத்தகத்தை பொது நன்மையைக்கருதி இனுமாக அனுப்புகிறோம். இப்புத்தகத்தில் நம்முன்னோர்செய்த பொன்போன்ற விதிகளை அமைத்து எழுதப்பட்டிருக்கின்றது ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டிய தவசியம்,

இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்தியசாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

22 பிராட்வே & 96, மவுண்ட்ரோட் மதராஸ்.

ஏஜெண்டு:—

M. A. நெல்லையப்ப முதலியார்,

38 சின்னக்கடைத்தெரு,

திருச்சிராப்பள்ளி.

வேண்டுகோள்.

செந்தமிழ்ச் செல்வச்சந்தா நேயர்களே!

நமது செந்தமிழ்ச் செல்வத்தின் இரண்டாவது வருடந்தொடங்கிச் சற்றேறக்குறைய ஆறுமாதமாகியும் சந்தா செலுத்தாதிருக்கலாமா? தயவு செய்து சந்தாவைச் செலுத்தி உதவி புரியுங்கள். பத்திரிகை பிந்துவதற்கு காரணம் யாதாயிருக்குமென்பதைப் பலரும் அறிவர் நமது செந்தமிழ்ச் செல்வத்திற்காக சொந்தத்தில் அச்சுக்கூடம் வாங்கவும் பண்டு (Fund) சேர்க்கவும் தீர்மானித்திருக்கிறோம். அதற்காகப் பரோபகார பிரபுக்கள் உதவி செய்யின் வந்தனத்துடன்பெற்று பத்திரிகையின் வாயிலாய் நன்றி காட்டுவோம்.

சென்றவருஷம் பன்னிரண்டு மாதமும் பத்திரிகை வாங்கிவந்து இரண்டாவது வருஷத்து முதற் பத்திரிகையை முதல் வருஷத்திற்காக வி. பி. அனுப்பியபொழுது திருப்பிவிட்டார் பலர். அவர்களை என்னென்று வாழ்த்துவமோ. இதுதான் அன்னோர்செய்யும் உபகாரம் போலும். உள்ளூர்ச் சந்தாதாரரும் நாம அனுப்பும் ஆளின்காலை யொடித்துக் கருணைகாட்டாதிருக்கின்றனர். இதிலும் ஒரு விநோதம் அதை அடுத்த மாதம் வெளியாக்குவோம்.

பத்திராதிபர்.

விடை.

"மார்க்கட்டு வாசிகள்" என்று கையெழுத் திட்டவரோ நம் பெயரோடு வெளி வாரும் பதில் விடுப்பம்.

மானேஜர்.

எஸ். பி. ஜி. ஐஸ்கூல் மாதுசினின் ஜுலை மாதச் சஞ்சிகை வெளிவந்துலவுகின்றது. எம். ஏ. பட்டமும் மற்றுமுயர்ந்தபட்டமும் பெற்ற பெருந்துரைகளால் எழுதப்பெற்று நடை பெருகின்றது. பத்திராசிரியராகிய எஸ். பி. ஜி. ஐஸ்கூல் எட்மாஸ்டர் ஸ்ரீமான் எஸ். கே. தெய்வசிகாமணி பீ. ஏ. எல். டி. அவர்களின் முயற்சி மிகமிகக் கொண்டாடத்தக்கதே அங்கில நடைப்பத்திரிகை. சஞ்சிகை ஒன்று 4 அணா. வருஷத்திற்கு ஒரு ரூபாய் தான். தனிச்சஞ்சிகை பார்க்க விரும்புவோர் 4½ அணா தலைச்சீட்டுகளை எஸ். பி. ஜி ஐஸ்கூல் எட்மாஸ்டராகிய பத்திராதிபருக்கு அனுப்பினால் சஞ்சிகையை இலேசிலே பெறலாம்.

பத்திராதிபர்.